# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

**OS. No.44/2020**

சாட்சி - PW1

பெயர் - திரு. லோகநாதன்

தந்தை பெயர் - திரு. பச்சையப்பன்

வயது - 64

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29**.07.2026.**

**குறுக்கு விசாரணை**

1. நான் சிவில் இன்ஜினியராக வேலை செய்கிறேன். நான் கம்பெனியில் வேலை செய்கிறேன். நான் சிவில் இன்ஜினியர் டிப்ளோமோ முடித்துள்ளேன். என் மனைவி PG முடித்து ஆசிரியர் பயிற்சி முடித்துள்ளார். எனது மனைவி பிரதிவாதி பள்ளியில் சுமார் 20 வருடமாக 2000ல் இருந்து ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார். பிரதிவாதி எங்களுக்கு நன்கு பழக்கம். 2018ல் எனது மனைவி பிரதிவாதி பள்ளியிலிருந்து நின்றுவிட்டார். என் மனைவிக்கு இடுப்பு வலி என்பதால் உடல் உபாதை காரணமாக பணியிலிருந்து நின்றுவிட்டார். பிரதிவாதி எனது மனைவி மூலமாக தான் பழக்கம். நேரடியாக பழக்கம் கிடையாது. என்னுடைய முதல் ப்ரோநோட் 01.06.2017 ஆகும். வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.44 வரை உள்ள ப்ரோநோட்டுகளில் எங்கேயாவது பிரதிவாதி வட்டி கொடுத்ததற்கான மேலொப்பம் செய்யப்பட்டுள்ளதா என்றால், இல்லை.

2. 2020ல் நான் தாவா தாக்கல் செய்தேன். எந்த மாதம், தேதி நினைவில்லை. நான் தாவாவை 24.06.2020ல் தாக்கல் செய்துள்ளேன். நான் வட்டிக்கணக்கை எனது தரப்பில் ஆவணமாக குறியீடு செய்து கொள்ளவில்லை என்றால், சரிதான். 01.06.2017 முதல் 22.06.2017 வரை ஒரே மாதத்தில் எட்டு ப்ரோநோட்டு முன்னிலைக்கு பிரதிவாதி

கடன் வாங்கினார். பிரதிவாதி என்னிடம் அடிக்கடி வந்து பணம் கடன் கேட்பார். அவர் கேட்கும் தொகையை கடனுக்கு கொடுத்து தாவா ப்ரோநோட்டுகளை பெற்றுக்கொள்வேன். வா.சா.ஆ-1 முதல் வா.சா.ஆ.44 வரை ப்ரோநோட்டுகள் அனைத்தும் நான் பொய்யாக தயாரிக்கப்பட்ட ப்ரோநோட்டுகள் என்றால், சரியல்ல. வா.சா.ஆ.45 ஆவணம் பிரதிவாதிகளின் சகோதரிகள் எழுதி கொடுத்ததாக நானாக பொய்யாக தயாரித்துக்கொண்டேன் என்றால், சரியல்ல. வா.சா.ஆ.45ல் என்ன விதமான கடன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், பிரதிவாதி தான் எழுதி கொடுத்தார். வா.சா.ஆ.45ல் எழுத்துக்களுக்கும் கையெழுத்துக்களுக்கும் இடைவெளி அதிகமாக உள்ளது என்றும், நான் பொய்யாக ஆவணத்தை தயாரித்தேன் என்றால், சரியல்ல.

3. வா.சா.ஆ.45 எழுதும்போது ஷீபா மற்றும் தவமணி சாட்சியாக இருந்தார்கள். ஷீபா, தவமணி தற்போதும் பிரதிவாதியின் பள்ளியில் வேலை செய்கிறார்களா என்பது பற்றி தெரியாது. மேற்படி ஷீபா, தவமணியை எனது தரப்பு சாட்சியாக விசாரிக்கப்போகிறேனா என்றால், இல்லை. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ-44 ப்ரோ நோட்டுகளை எனது மனைவி சுமதி எழுதினார். ப்ரோ நோட்டு எழுதும் போது என் மனைவி மற்றும் என் வீட்டில் வேலை செய்த வனஜா இருந்தார். மேற்படி அனைத்து ப்ரோ நோட்டுகளையும் என் முன்னிலையில் எனது மனைவி எழுதிய போது நானும், வனஜாவும் இருந்தோம்.

பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

The Witness deposed on solemn affirmation and typed to my dictation in open court and read over the same to the witness and admitted by the witness to be correct, on this day the July 29th 2026.

P V SANDILYAN Digitally signed by P V SANDILYAN Date: 2026.07.31 03:18:39 +0600
Additional District Judge(FTC),
Vellore.